1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 463, திரு. எம். ஆண்டி அம்பலம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்,

463—

போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகள் விற்பனை,

*6008 திரு. எம். ஆண்டி அம்பலம்:

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) போக்குவரத்துக் கழகங்களின் பழைய பேருந்துகள் என்ன நெறிமுறைகளின்படி பயனற்றவை என தீர்மானிக்கப்படுகிறது?

(ஆ) இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகளில் பயனற்றவை என தீர்மானிக்கப்பட்டு 1988–89 முதல் 1990–91 ஜனவரி முடிய அறிவிக்கப்பட்ட பேருந்துகள் எண்ணிக்கை எவ்வளவு?

(இ) இவ்வாறு தீர்மானிக்கப்பட்டு அறிவிக்கப்பட்ட பேருந்துகள் எவ்வகையில் விற்பனை செய்யப்படுகின்றன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தற்போது திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் தவிர பிற போக்குவரத்துக் கழகங்களின் பேருந்துகளைப் பொருத்த வரையில் அவைகள் மொத்தமாக 6 ஆண்டுக் காலம் ஓடியிருந்தால் அல்லது ஏழு இலட்சம் கி.மீ. ஓடியிருந்தால்—இதிலே எந்த நிபந்தனையை பூர்த்தி செய்திருந்தாலும் அத்தகைய பேருந்துகள் கண்டெம் செய்ய கூடிய நிலையை அடைந்தன என தீர்மானிக்கப்படுகிறது, திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பேருந்துகளைப் பொறுத்த வரையில் ஏழு இலட்சம் கி.மீ. ஓடியிருந்தாலும் அல்லது மூன்றாண்டுகள் பயன்படுத்தினாலும் அவற்றைக் கண்டெம் செய்யக் கூடிய நிலை அடைந்ததாக தீர்மானிக்கப்படுகிறது,

(ஆ) 1988–89 முதல் 1990–91 வரையில் மொத்தமாக 165 பேருந்துகள் இவ்வாறு பயனற்றுப் போனதாக—கண்டெம் செய்யப்பட்டதாக இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்தால் அறிவிக்கப்பட்டன.

[1992 ஏப்ரல் 3

(இ) இவ்வாறு கண்டெம் செய்யப்பட்ட பேருந்துகள் கல்வி நிறுவனங்களுக்கு அரசு நிர்ணயித்துள்ள விலையிலும், ஏனையோருக்கு பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப் புள்ளி அறிவிப்பு—டெண்டர் மூலமாக விற்கப்படுகிறது. இந்த வகையான பேருந்துகள் அரசு நிர்ணயித்துள்ள விலையைக் காட்டிலும் அதிகமான தொகைக்கு ஏலத்தில் எடுக்கப்படுகின்றன.

திரு. எம். ஆண்டி அம்பலம்: பேரவைத் தலைவர் அவர்களே, இராணி மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்திலே—தனியாருக்கு 6 ஆண்டுகள் கழித்துத்தான் இந்த பஸ்களை ஏலம் விட வேண்டும் என்று ஒரு கொள்கை அரசுக்கு இருக்கிறது—ஆனால் இரண்டு ஆண்டுகள், மூன்று ஆண்டுகளுக்குள்ளாக தனிப்பட்டவர்களுக்கு ஏலம் விட்டிருப்பதாக தெரிய வருகிறது. எனவே அமைச்சர் அவர்கள் அந்த மாதிரி இல்லாமல் ஆறாண்டுகள் கழித்து ஏலம் விடுவதைப் பற்றி பரிசீலிப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறாண்டுக் காலம் என்று சொல்லுவதற்குக் காரணம், மங்கம்மாள் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கின்ற பேருந்துகள் குறைந்த தூரத்தில் ஓடும் பேருந்துகள், 7 இலட்சம் கி.மீ. ஓடினால்தான் அதைக் கண்டெம் செய்ய வேண்டும் என்று நம்முடைய அரசுத் துறையிலேயிருந்து அறிவுரை வழங்கப்பட்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்குள் விற்கப்படுவதாக குறிப்பிட்டார்கள். இது போன்ற குறிப்பு இதுவரை அரசுக்கு வரவில்லை. அப்படி ஏதாவது இருக்கும் என்று மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டால், உடனடியாக அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். ஆண்டி அம்பலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக்கூடங்கள், கல்லூரிகள், சமூக சேவை நிறுவனங்களுக்கு விற்கப்படுவது சலுகை. அடிப்படையில் விற்கப்படுகிறதா? எந்த மாதிரி சலுகை அடிப்படையில் விற்கப்படுகிறது? அப்படி விற்கப்படும் பஸ்கள் எத்தனை என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வி நிறுவனங்களுக்காக சலுகை அடிப்படையில் நாம் வழங்கிக் கொண்டிருக்கிறோம். அரசால் அங்கீகரிக்கப்பட்டு, அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கு நீண்ட சேசிஸ் பேருந்துகளை ரூ, 80,000-க்கும். குறுகிய சேசிங் பேருந்துகளை ரூ. 20,000, க்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்டிருக்கிற கல்வி நிறுவனங்களுக்கு நீண்ட சேசிஸ் பேருந்துகள் ரூ. 85,000-க்கும். குறுகிய சேசிஸ் பேருந்துகள் ரூ. 25,000-க்கும். அரசு அங்கீகாரம் பெறாத கல்வி நிறுவனங்களுக்கு, நீண்ட சேசிஸ் பஸ்கள் ரூ. 95,000-க்கும், அதே போல

1992 ஏப்ரல் 3]

குறுகிய சேசிஸ் பேருந்துகள் ரூ, 80,000-க்கும் சுயநிதி கல்லூரிகளுக்கு நீண்ட சேசிஸ் பேருந்துகள் ரூபாய் ஒரு இலட்சத்திற்கும், குறுகிய சேசிஸ் பேருந்துகள் ரூ, 90.000-க்கும், அதே போல திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளைப் பொறுத்த வரையில் ரூ, 1,25,000-க்கும்—அது சிறந்த பேருந்துகளாக இருக்கின்ற காரணத்தால்—சூப்பர் டீலக்ஸ் என்று சொல்லப் படுகிற திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தின் பேருந்துகள் ரூ, 1,40,000-க்கும் கல்வி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகின்றன.

முற்பகல் 10—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எஸ். எஸ். ராமசுப்பு,

திரு. எஸ். எஸ். ராமசுப்பு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே பதில் சொல்லும் போது 3 ஆண்டுகளில் இந்த பஸ்கள் எல்லாம் 'கண்டெம்' பண்ணப்படுவதாகச் சொல்லி இருக்கிறார்கள். (குறுக்கீடு) கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு வேறு கார்ப்பரேஷன்களிலிருந்து பழைய பஸ்களை வாங்கி ஓட்டுவதனால், அதாவது அங்கு வண்டிகள் இல்லை என்பதனால் இந்த மாதிரி வாங்கிக் கொண்டு இருக்கிறோம் என்று சொல்லி இருக்கின்றார்கள்; அவற்றை அப்படி விடும்போது ஏராளமான மெயின்டினன்ஸ் காஸ்ட் தான் ஆகின்றது. இதேபோல பழைய பஸ்களை வாங்கி அங்கே ஓட்டுவதனால் மெயின்டினன்ஸ் காஸ்ட் தான் அதிகமாகிறது. அதனால் லாபம் ஒன்றும் இல்லை என்று நான் நினைக்கின்றேன். எனவே, கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்திற்கு புதிய பஸ்களை விடுவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற நேரத்தில், திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தில் வேண்டுமானால் 3 ஆண்டுக் காலம்; அது எதற்காக என்று சொன்னால், ஏறத்தாழ நாள் ஒன்றுக்கு 600, 700 கிலோ மீட்டர் தொலைவு பேருந்து செல்கிறது. வேறு போக்குவரத்துக்கழகங்களில் 6 ஆண்டிற்கு ஒரு முறை தான்; 7 இலட்சம் கிலோ மீட்டர் தாண்டினால்தான் 'கண்டெம்' செய்கிறோம். அது குறிப்பிலே இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டது கட்டபொம்மன் போக்குவரத்துக் கழகத்தின் பழைய பேருந்துகளை வேறு போக்குவரத்துக் கழகத்தில் இருந்து வாங்கி ஓட்டுவதால், அந்த வண்டிகள் பிரேக் டவுன் ஆகிறது; அதனால் நஷ்டம் ஏற்படுகிறது என்று குறிப்பிட்டார்கள். கட்டபொம்மன் போக்குவரத்துக்கழகம் துவங்கிய நாளிலிருந்து இன்று வரையில் நஷ்டத்தில் இருக்கின்ற காரணத்தினால், அதிலே பணம் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. அங்கே சேசிஸ் வாங்க வேண்டுமென்று

சொன்னாலும் கூட இப்போது தான் ஓரளவிற்கு நிதி பெருகிக் கொண்டு இருக்கின்ற காரணத்தினால், நல்ல பேருந்துகளை வாங்க வேண்டுமென்று நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கிற தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்ததன் காரணமாக. நம்முடைய தமிழகத்தின் வரலாற்றில் 2,500 பேருந்துகளை ஒரே ஒரு ஆண்டிடிலே புதுப்பித்த சரித்திரம் இப்போது தான் என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன். 2,500 பேருந்துகளும் 1992 டிசம்பர் முடிவதற்குள் புதுப்பிக்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வி. பி. சந்திரசேகர்.

திரு. வி. பி. சந்திரசேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துக் கழகங்கள், நீண்ட தூர போக்குவரத்திற்காக வயதான கவர்ச்சியற்ற போக்குவரத்து பேருந்துகளை இயக்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதனால் நெடுந்தூரப் பயணிகளுக்கு சிரமம் ஏற்படுகிறது. அந்த நிலையைப் போக்க இளமையான ,கவர்ச்சியான (சிரிப்பு) பேருந்துகளை விடுவதற்கு அரசாங்கம் முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேருந்தில் என்ன கவர்ச்சி வேண்டி இருக்கிறது? மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வயதான பேருந்துகளை நீண்ட தூரம் ஓட்டுவதாகச் சொன்னார்கள். வயதானவர்கள் எல்லாம் காசி, இராமேஸ்வரம் என்று நீண்ட தூரம் பயணம் செய்கிறார்கள். (சிரிப்பு) ஆகவே, உறுப்பினர்கள் அவர்கள் குறிப்பிடுவது, இளைய வயதாக இருக்கிற பேருந்துகள் விடப்படுமா என்று கேட்டார்கள். இளைஞர்களை இங்கே சென்னை மாநகரிலே நீங்கள் பார்க்கிறீர்கள். ஒரு பஸ் ஸ்டாப்பிலே இருந்து இன்னொரு பஸ் ஸ்டாப்பிலே அவர்கள் இறங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அதையும் கருத்திலே கொண்டுதான் நல்ல பேருந்துகளை இயக்குவதற்கு இந்த அரசு நடவடிக்கை மேற்கொண்டு இருக்கிறது. திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்தைப் பொறுத்த வரையில் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் எங்களுக்கு ஆணையிட்டு இருக்கின்றார்கள். உடனடியாக திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகத்திலே இருக்கின்ற சில பேருந்துகளை உடனுக்குடன் மாற்றப்பட வேண்டுமென்று கருத்துரை வழங்கப்பட்டு இருக்கிறது. அதை அரசு கருத்திலே கொண்டு உடனுக்குடன் இந்தத் துறை நடவடிக்கை மேற்கொள்ளும்.

1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 464, திருமதி என். சி. கனகவல்லி, மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர்:

464—

நெசவாளர்களுக்கு குறைந்த விலையில் நூல் அளித்தல்.

* 3398 திருமதி என். சி. கனகவல்லி:

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விளாத்திக்குளம் தொகுதியில் புதூர், நாகலாபுரம், கரிசல்குளம் ஆகிய ஊர்களில் நெசவுத் தொழிலையே நம்பி வாழும் நெசவாளர்களுக்கு நூல் தேவையான அளவு குறைந்த விலையில் கிடைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

விளாத்திக்குளம், தொகுதியில் உள்ள புதூர், நாகலாபுரம், கரிசல்குளம் போன்ற ஊர்களிலுள்ள நெசவாளர்கள் அருகாமையில் உள்ள கூட்டுறவு சங்கங்களில் அங்கத்தினர்களாக ஆவதோ அல்லது அவர்களாகவே புதிய கூட்டுறவு சங்கத்தை அமைத்துக் கொண்டாலோ, அரசு தருகிற குறைந்த விலையிலான நூலைப் பெற்றுக் கொள்ள முடியும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி என். சி. கனகவல்லி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெசவுத் தொழிலாளர்களுக்குத் தேவையான அளவு நூல்கள் மானிய விலையில் கூட்டுறவுத் துறை மூலம் வழங்க அரசு முன்வருமா எனவும், இந்த ஆண்டுக்கான நூல்களை ரகம் பிரித்து நூல் வழங்க உத்தேசம் உள்ளதா எனவும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறையில் அங்கத்தினர்களாக உள்ளவர்களுக்கு கோ-ஆப்டெக்ஸின் வாயிலாக குறைந்த விலையில் நூல் விநியோகிக்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 465, திரு. கே. சிங்காரம், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.